# பாரதீய வித்யா பவன்

கோவை மையம்

✆ 0422 2542481 ✉ kendra@bvbcbe.in

# ‘தமிழ் மாமணி’ மற்றும் ‘தமிழ்ப்பணிச் செம்மல்’

## விருதுகள் வழங்கும் விழா

**நவம்பர் 30, 2019 (சனிக்கிழமை)**

பின்னை நின்று என்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்திலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!

- திருமந்திரம்

## ‘தமிழ் மாமணி’ விருது

வளம், பண்பாடு, மரபு, தொன்மை இவற்றால் செறிவுடைய செம்மொழி தமிழ். தூய மணி ஒன்று சுடர்விட்டுத் தான் ஒளிர்வது போன்று, தன்னைச் சார்ந்தாருக்கும் அப்படி ஒளியூட்டும். தமிழ் அப்படி ஒரு மணி. பலநூறு ஆண்டுகளாக இலக்கிய வளமும் இலக்கண நுட்பமும் உடையதாய்ப் பொலிகிறது.

அறிவிலே தெளிவுடையவர்களாக இருந்து, தமிழ் என்னும் அளப்பரும் சுரங்கத்தில் மூழ்கி, மணிகளை எடுத்துத் தாம் அனுபவித்து, பிறகு தம் எழுத்தாலும் பேச்சாலும் பிறருக்கும் அந்தத் துய்ப்பைப் புலப்படுத்துபவர்கள் மாமணி போன்றவர்கள். அத்தகைய ‘தமிழ் மாமணி’களைத் தமிழ்ச் சமூகத்துக்கு அடையாளம் காட்டும் பவனின் முயற்சியே இந்த விருது வழங்கல் பணி. தக்க அறிஞர்க்குப் பெருமை செய்வதன் மூலம் சமுதாயமும் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்கிறது.

பரவலாக அறியப்பட்டவர்க்கும், வளர்ந்து வரும் தமிழ் அறிஞர்க்கும் அவர்களுடைய தமிழ்ப்பணியின் வீச்சு கருதி விருது வழங்கப்படும். பவன் மூலம் ஒரு புதிய ஏற்பளிப்பை அவர்கள் பெறுவார்கள்.

கலை, கல்வி, சமயம், சமூகம் சார்ந்து அரும்பணி ஆற்றி வருபவர்களுக்குக் ‘குலபதி முன்ஷி’ விருது வழங்கிப் பெருமைப்படுத்தும் தொடர் நிகழ்வாக, தமிழிலக்கியச் சான்றோர்க்குத் **‘தமிழ் மாமணி’** விருது வழங்குவதில் பவன் பெருமை கொள்கிறது.

## ‘தமிழ்ப்பணிச் செம்மல்’ விருது

தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகிய இவற்றின் வளர்ச்சிக்குப் பேராசிரியர்களும், தமிழறிஞர்களும் ஆற்றிவரும் பணிகள் போற்றத்தக்கவை; வெளியுலகம் அறிந்தவை. அவர்கள் போலப் பிற துறையைச் சார்ந்தவர்களும் இலக்கிய அமைப்புகள் ஏற்படுத்தியும், கருத்தரங்குகள் நடத்தியும், நூல்களை அச்சிட்டு வெளியிட்டும், இவை போன்று பிற பணிகள் செய்தும் தமிழுக்குத் தொண்டு புரிகிறார்கள். அவர்களை அடையாளம் கண்டு பெருமைப்படுத்த வேண்டும் என எண்ணிப் பாரதீய வித்யா பவன் கோவை மையம் **‘தமிழ்ப்பணிச் செம்மல்’** என்ற விருதினை ஆண்டு தோறும் தமிழ்ச் சார்ந்து தொண்டாற்றும் ஒருவருக்கு வழங்கிப் பெருமை கொள்கிறது.

---

### ‘தமிழ் மாமணி’ விருதைப் பெற்றவர்கள்

**2010 – முனைவர் சிற்பி பாலசுப்ரமணியம்**
**முனைவர் கி.சுப்ரமணியன் (ஜகேஎஸ்)**

**2012 – முனைவர் ந.இரா.சென்னியப்பன்**
**முனைவர் இ.சுந்தரமூர்த்தி**

**2013 – பேராசிரியர் இராம.இருசுப்பிள்ளை**
**முனைவர் அ.அ.மணவாளன்**

**2015 – பெரும்புலவர் திரு. ப.வெ.நாகராஜன்**

**2017 – முனைவர் இரா.பூங்குன்றன்**

**2018 – முனைவர் க.ரத்னம்**

### ‘தமிழ்ப்பணிச் செம்மல்’ விருதைப் பெற்றவர்கள்

**2015 – திரு. மு.வேலாயுதம், விஜயா பதிப்பகம்**

**2017 – பல்லடம் திரு.மாணிக்கம்**

**2018 – டாக்டர் ஜே.ஜி.சண்முகநாதன்**

# பாரதீய வித்யா பவன்
கோவை மையம்

## விருதுகள் வழங்கும் விழா

**'தமிழ் மாமணி'**
விருது பெறுபவர்
முனைவர் **கா.அரங்கசாமி** அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு) மற்றும் எழுத்தாளர்

**'தமிழ்ப்பணிச் செம்மல்'**
விருது பெறுபவர்
திரு. **நா.நஞ்சுண்டன்** அவர்கள்
செயலர், கம்பன் கழகம், கோவை

வாழ்த்துரை

**தமிழ் மாமணி**
முனைவர் **சிற்பி. பாலசுப்ரமணியம்** அவர்கள்
மேனாள் தமிழ்த்துறைத்தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை மற்றும் பவன் நிர்வாகக்குழு உறுப்பினர், கோவை

நாள் : நவம்பர் 30, 2019 (சனிக்கிழமை)

நேரம் : காலை 10.00 மணி

இடம் : பவன் வளாகம், ஆர்.எஸ்.புரம், கோவை

**இவ்வினிய விழாவிற்குத் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர்
தலைவர்

தேநீர் : காலை 9.30 மணி

## விருது பெறுபவர்கள்

### முனைவர் **கா.அரங்கசாமி**

பேராசிரியர் கா.அரங்காசாமி (78), தாராபுரம் நஞ்சையம்பாளையம் பெற்றெடுத்த தவமகன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதுகலைப் (எம்.ஏ) பட்டமும், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றவர். 33 ஆண்டுகள் அரசுக் கல்லூரிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பேராசிரியர், கவிதை, கவிதை நாடகம், ஆய்வு நூல் என்பனப் போலப் பத்து நூல்களை எழுதியுள்ளார். கம்பராமாயணம் 1000 பாடல்களுக்கும் திருமந்திரம் 1000 பாடல்களுக்கும் உரை எழுதியுள்ளார். கவிஞர், உரையாசிரியர், ஆய்வறிஞர் எனப் பலதுறை அறிஞரான பேராசிரியர் இன்றும் உடுமலை, தாராபுரம் போன்ற இடங்களில் திருவாசகம், திருக்குறள், கம்பராமாயண வகுப்புகள் நடத்தித் தமிழ்த் தொண்டு புரிந்து வருகிறார். பல இடங்களில் பல நிறுவனங்கள், விருதுகளும் பரிசுகளும் இவருக்கு நல்கிப் பெருமைப்பட்டுள்ளன.

### திரு. **நா.நஞ்சுண்டன்**

கோவை நகரின் முக்கிய இலக்கிய அமைப்புகளாகத் திகழும் கம்பன் கழகம், இளங்கோ இலக்கிய மன்றங்களின் செயலாளராக இருக்கும் திரு. நா.நஞ்சுண்டன் (90) மூத்த தமிழ்த் தொண்டர். கலைக்களஞ்சியப் பதிப்பாசிரியர் திரு.பெரியசாமித் தூரன், கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகன்நாதன், தமிழியக்கத் தலைவர் ம.பொ.சி., ஜீவா, கம்பன் அடிப்பொடி சா.கணேசன் போன்ற இலக்கிய அறிஞர்களுடன் நெருங்கிப் பழகியவர். பல விருதுகள், பரிசுகள் பெற்ற நா.நஞ்சுண்டன் அவர்களின் தொடர் முயற்சியாலும் ஓய்வற்ற உழைப்பாலும் கம்பன் கழகமும், இளங்கோ மன்றமும் கோவையில் பல கூட்டங்களை நடத்தி வருவதைத் தமிழன்பர்கள் நன்கு உணர்வார்கள். நூலாசிரியர், சொற்பொழிவாளர் என்ற முகங்களையும் உடைய பெரியவர்.